ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி கூ. ஆங்கிரஸஹுபுரட்டாசி,ஐப்பசி பகுதிகூ,ய
Vol.9. September & October,October & November32.**No.9,10.**

திருவள்ளுவர் கடவுள் வாழ்த்து.

(53-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஆதிபகவற்குத் தலைமை செயற்கை யுணர்வானன்றி இயற்கை யுணர்வான் முற்றுமுணர்தலானுங் கோள்க. தமிழெழுத்திற்கேயன்றி

ஆதிபகவற்குத் தலைமை செயற்கையுணர்வானன்றி இயற்கை யுணர்வான் முற்றுமுணர்தலானும் என்பது ஆதிபகவற்குத் தலைமை யாவது நூன் முதலிய காரணங்களாலுண்டாம் ஞானத்தானன்றி இயற்கையான நித்ய ஞானத்தால சர்வபதார்த்தங்களையும் சாமானியரூபமாயும் விசேஷரூபமாயும் அறிதலாலும் என்றவாறு. செயற்கைஞானமாவது-காரணத்தாலுண்டாம் ஞானம். அது காரணத்தளவ்ரன பரிச்சின்னமாய் (அளவுபட்டதாய்) இருத்தலின் அபரிச்சின்னமாகிய சர்வ பதார்த்தங்களையும் விஷயஞ்செய்யும் சாமர்த்தியமுடையதன்றென்பார் செயற்கையுணர்வானன்றி யென்றார்.

இயற்கையுணர்வு - இயல்பாகிய ஞானம். ஞானத்திற்கு இயல்பாவது-தனது சத்பாவததில் இந்திரிய முதலிய பிரமாணங்களும், கடபடாதி விஷயங்களுமாகிய ஞானசாதனங்களில யாதொன்றினையும் அபேக்ஷியாமை. இதனால் நித்தியமான ஞானமெனபது போந்த பொருளாம். முற்றுமுணர்தல்-சகல பதார்த்தங்களையும் சாமானிய வடிவமாயும், விசேஷ வடிவமாயும் அறிதல். சாமானிய வடிவமா

வடவெழுத்துக்கும் முதலாதல் நோக்கி, எழுத்தெல்லாமென்றார். ஆதி

இது தூமம் என்கிற சாக்ஷுஷப் பிரத்யக்ஷத்திற்குப் பின்பு தூமத்வவடிவ சாமானிய லக்ஷண சம்பந்தத்தால் சகல தூமங்களையும் விஷயஞ்செய்யும் அலௌகிக சாக்ஷுஷப் பிரத்யக்ஷமுண்டாவதாம். இவ்வாறே ஒரு குடத்தின் பிரத்யக்ஷத்தால் சகல குடங்களின் பிரத்யக்ஷமும், ஒரு படத்தின் (ஆடையின்) பிரத்யக்ஷத்தால் சகல படங்களின் பிரத்யக்ஷமும் அலௌகிக சம்பந்தத்தாலுண்டாகின்றன; என்பது நியாய மதம். இவ்வாறே பிறவற்றிற்குங்கொள்க.

அஃதாவது - சகல வியக்திகளிலும் தனித்தனி யிருப்பதான அசாதாரண தர்மங்களை விஷயஞ்செய்யாது அவற்றின்கண்ணுள்ள சாதாரண தர்மமாகிய ஜாதிவிசிஷ்டமாய் அறிதல் என்பதாம். இது, ஆத்மாவின் ஞானக்கைப்பற்றிய விஷயமாதலின் சாமானியமாயறிதலென்பதற்குத் திருஷ்டாந்தமாத்திரமாய் எடுத்துக்கொள்ளப்பட்டதன்றி, ஈசுவரனும் இவ்வாறு அலௌகிக சம்பந்தத்தால் எல்லாவற்றையும் அறிகிறனென்பது பொருளாகக் கருதற்க. ஏனெனில் ;—ஈசுவரனது ஞானம் நித்தியமாதலின் அதற்குச் சம்பந்தாபேக்ஷையில்லை.

விசேஷவடிவமாயறிதலாவது—எந்தெந்த வியக்தியில் எந்தெந்த அசாதாரண தர்மங்களிருக்கின்றனவோ, அந்தந்த வியக்தியை அந்தந்த அசாதாரண தர்மவிசிஷ்டமாய் சர்வ பதார்த்தங்களையுமறிதலாம். இவ்வாறு முற்றுமுணர்தல் என்பதற்குச் சகல பதார்த்தங்களையும் அவ்வவற்றின்கண்ணுள்ள சர்வதர்ம விசிஷ்டமாயறிதல் என்பது பொருளாம்.

மேலும், உரையாசிரியர் முன்னர் அகாரத்திற்கும், ஆதிபகவற்குமுள்ள பொதுத்தன்மை இன்னதென்று சிறப்பித்துக் கூறாது, 'இது தலைமைபற்றிவந்த எடுத்துக்காட்டுவமை' என்று பொதுவாய்க் கூறியதின தாத்பர்யம் அத்தலைமைக்கு ஏதுவாகிய சகல தர்மங்களும் அங்கீகரிக்கத்தக்கன என்பதாம். அகாரத்திற்குத் தலைமை முற்கூறியவற்றோடு ஏற்பனபிறவுங் கொள்க. ஆதிபகவற்குத் தலைமை ஜகத்காரணத்வம், சேஷித்வம், நியாமகத்வம், நித்ய ஞானுசிரயத்வம் முதலாயின. இதனல் உவமை யடையாகிய விகாரமின்மையைப் பொருட்கண்ணுங்கூட்டி, தான் பிறிதொன்றன்

பகவன் என்னும் இருபெய ரெட்டேப் பண்புத்தொகை வடநூன் முடிவு.

யறிதலாவது - காரியமாகாது சகல சகத்திற்கும் தானே காரணமா யிருத்தலும் செயற்கை யுணர்வானன்றி இயற்கையுணர்வால் சகல பாதார்த்தங்களையும் சகல தர்மவிசிஷ்டமாயறிதலும ஆதிபகவற் குத் தலைமை யென்பது போந்தபொருளாம்.

தமிழெழுத்துக்கே யன்றி வடவெழுத்துக்கும் முதலாதல் நோக்கி எழுத்தெல்லாமென்றூர் என்பது தமிழெழுத்துக் காரண மாதலே யன்றி, வடவெழுத்துக்கும் காரணமாதலபற்றி எல்லா மென்னும் எஞ்சாப்பொருளுணர்த்துஞ் சொல்லைக் கூறினர் என்ற வாறு. எழுத்து என்னும் பாலபகாவஃறிணைச்சொல் ஈண்டு, தானே பன்மைப்பொருளுணர்த்த, அஃதாவது - எழுத்து அகர முதல என்று கூறியமாத்திரத்தால் ஒவ்வொரு எழுத்தும அகரமாகிய காரணத்தையுடையது எனனும பொருள் கிடைக்க, அதற்குமேல் எல்லாம் என்னுர் பதத்திற்குப பிரயோஜனம் யாதெனனும் சங்கையை அநுவதித்து அதறகுப் பிரயோஜனங் கூறுவார் தமி ழெழுத்துக்கேயன்றி வடவெழுததுக்கு மென்றூர். இதனல் எல லாம் என்னும் பதத்திற்கு ஒருவகையால் பிரயோஜனங்கூறியவாறு.

இனி, ஒவ்வொரு எழுத்துக்கும் அகாம் காரணமாதலாவது— “ காரியநியத பூர்வவிருத்திகாரணம் ” என்னும் காரணத்தின் லக்ஷ ணப்படி ஒவவொரு எழுத்தின் உற்பத்திக்கு முதல் க்ஷணத்தில் தவறுமல் அகாம் ஒலித்து நிற்றலாம். இதனல் எந்த எழுததை உச்சரிப்பினும் முதல் க்ஷணத்தில் அகாம் தோன்றி அது உத்தர லக்ஷணததிலே பிறஎழுத்தைத் தோற்றுவிக்கும் என்பது போந்த பொருளாம்.

ஆதிபகவன் என்னும் இருபெயரொட்டுப் பண்புதொகை வடநூன் முடிவு என்பது ஆதிபகவன் என்னும் இரண்டு பெயர் கூடிய பண்புத்தொகை சாரைப்பாம்பு என்புழிப்போலத் தமிழ் நூல் விதிப்படி பகரவொற்றுமிகாமல் வடநூல் விதிபற்றி இயல் பாய்ப் புணர்ந்தது என்றவாறு.

உலகு ஈண்டு உயிர்கண்மேல் நின்றது என்றது அசித் தத்துவ வாசகமான உலகு என்ற பதம் இங்கு அஜகலக்ஷணையால் (விடாத இலக்கணையால்) சித் தத்துவமான உயிர்களையுமுணர்த்துகின்றது என்றவாறு. அஃதாவது—புளித்தின்றுன் என்னும் சொற்றொடர்

புளிப்புச்சுவையுடைய பழத்தினைத் தின்றான் என்று சக்யார்த்தமாகிய புளிப்புச்சுவையையும், லக்ஷ்யார்த்தமாகிய பழத்தினையுஞ் சேர்த்துணர்த்துவதுபோல ஈண்டு உலக பதம் சக்யார்த்தமாகிய நிலத்திணையையும, லக்ஷ்யார்த்தமாகிய இயங்குதிணையையும் சேர்த்து உணர்த்துகின்றது எனபதாம். இனி, தேவதத்தன் முதலிய சொற்களின் சக்தி, தேவதத்த சரீர விசிஷ்ட ஆத்மாவில் இருப்பது போல உலக பதத்தின் சக்தி நிலத்திணை இயஙகுதிணை ஆகிய இரண்டின்கண்ணும் உள்ளதாதலால் ஈண்டு உயிர்கள்மேல் நின்றது என்பதற்குப் பாகத்தியாக லக்ஷணையினால் நிலத்திணையை விட்டு இயஙகுதிணையையே உணர்த்துகின்றது; என்று பொருள்கூறின் படும் இழுக்கென்னையெனில்;--லக்ஷணைக்குப் பீஜம் யாண்டும் தாத்பர்யானுபபத்தியாம். ஈண்டு நூலாசிரியா ஆதிபகவற்குக் கூறிய சேஷித்வ ப்ரதிசம்பந்தித்வம் நிலத்திணை இயஙகுதிணையென்னும் இரண்டின்கண்ணும் யாதொரு விரோதமுமின்றி அந்வயிப்பதால், அவ்விரண்டும் உலகபத சக்யமாதல் இஷ்டமாம். ஆதலால் லக்ஷணைக்குப் பீஜமில்லாததோடு இஷ்டமான அர்த்தத்தில சக்தி சங்கோசஞ்செய்வது அநுசிதமாம்.

ஆனால் உலகபத சக்தி நிலத்திணைக்கண்ணிருப்பினும் ஈண்டு உயிர்கள் மேனின்றது எனபதற்கு ஜகல் லக்ஷணையால் உயிர்களை மட்டும் உணர்த்துகின்றது என்று பொருளாமெனின்;—யாண்டு வக்தாவின் தாத்பர்யம் லக்ஷ்யார்த்தத்தில் மட்டும் சம்பவிக்கின்றதோ ஆண்டு ஜகல் லக்ஷணை கொள்ளபபடுகிறது. யாண்டு வக்தாவின் தாதபர்யம சக்ய லக்ஷ்யம என்னும இரண்டு அர்த்தங்களிலும் சமபவிக்கின்றதோ ஆண்டு அஜகல் லக்ஷணை கொள்ளப்படுகின்றது என்பது நியமமாம.

இங்ஙனமன்றியின் அஜகல் லக்ஷணைக்கு யாதொரு திருஷ்டாந்தமும் கிடைபபதின்று. ஈண்டு முற்கூறிய சேஷித்வப்ரதிசம்பந்தித்வம நிலத்திணை இயங்குதிணை என்னும் இரண்டின்கணணும் சமபவிபபதால அஜகல் லக்ஷணையை அங்கீகரிப்பதே உசிதமாம். ஆதலால உயிா கண்மேல் நின்றது என்பதை உயிர் கண்மேலும் நின்றது என்று கொள்ளவேணடும.

தொடரும்.

இராகவராமாநுஜதாஸர்.

ஸ்ரீ:

ஸ்ரீமத்கீதா ஸங்க்ரஹோபந்யாஸம்.

ஸ்ரீய:பதியாய் அவாப்தஸமஸ்தகாமனாகிய ஸர்வேசுவரன் நித்திய விபூதியாகிய பரமபதத்திற்கும், லீலாவிபூதியாகிய இவ்வுலகிற்கும் நாயகனாக விளங்குகிறான். இந்த விபூதி "லீலா வஸ்து அகிலம் ஜகத்" என்கிறபடியே அவன்றனக்கு விளையாட்டுக் கருவியாக விருக்கும். இந்த விபூதியைத் தன் சங்கல்ப மாத்திரத்தினால் படைத்துக் காத்து ஒடுக்குகின்றானதலால் இக்காரியம் அவனுக்கோர் பிரயாசையாக இருப்பதில்லை.

இந்த முதற்பெருங்கடவுள் "அணோரணீயாந் மஹதோ மஹீயாந்" என்கிறபடியே சிறியவை பெரியவைகளுள் எள்ளில் எண்ணெய்போலவும், மணலில் நீர்போலவும், எங்கணுமுள்ள மின்சாரம் போலவும் எங்கும் வியாபித்து இணையற்றவனாய் விளங்குகிறான். இங்ஙனமிருக்கும் இறைவனுடைய இயல்பை ஸம்ஸாரமாகிய சேற்றுக்குழியில் கிடந்துழலும் சாமானிய சேதனர்க்குப் புலப்படுவதில்லை.

இங்ஙனம் அரியவியல்பினையுடைய ஸர்வேசுவரன் ஸ்ரீவைகுண்டத்தில் பரவாசுதேவனாயும், சுவர்க்காதி லோகங்களில சங்கர்ஷணரூபமாயும், இம்மண்ணுலகில் மச்ச கூர்மாதி அவதாரங்களாய் அவதரித்ததோடு, பின்னானோர் வணங்குஞ்சோதியாகிய அர்ச்சாரூபியாயும் விளங்குகிறான்.

இவ்வாறு விளங்குகிற இறைவனுடைய தன்மைகளையுஞ், ஜீவர்களின் இயல்புகளையும், இவர்களுக்குரிய பிரயோஜனத்தையும், அதனையடையும் உபாயத்தையும், அதற்குத் தடையையும மாந்தர்கள் செவ்வனே உணர்ந்தாலன்றி உஜ்ஜீவிப்பதற்கு வழியில்லை.

இவ்விஷயங்களை வேதங்களைபபயின்று தெரிந்துகொள்ளலாமென்று பார்த்தாலோ அதுவும அரிய செயலாகத் தோற்றுகிறது. வேதங்கள் நான்கு விருக்ஷங்கள் போன்றன. அவற்றின் அடிப்

பாகம் தமோகுண சம்பந்தமானவற்றைப் புலப்படுத்தும். இதனைப் பின்பற்றலாகாது. பின்பற்றியவர்கள் கீழ்நோக்கிய போக்குள்ளவர்களாய் சுகக்கலப்பில்லாத நரக வாஸத்திற்கே ஆளாவார்கள். இந்த விருக்ஷங்களின் நடுப்பாகங்களோ ரஜோகுண ஸம்பந்தமானவை. இவற்றைக்கையாண்டவர்கள் ஸம்ஸாரிகளாய்ப் பிறந்திறந்துழலும் துன்பத்திற்கு ஆளாவார்கள். இவ்விருக்ஷங்களின் மேற்பாகங்கள் ஸத்வகுண ஸம்பந்தமுடையன. அவை, பகவத் ஸ்வரூபத்தையும், பகவானருளிற்குப்பாத்திரமாகும் சேதனர் நடந்துகொள்ளவேண்டிய முறையையும், முக்தியின் மேன்மையையும், அர்ச்சசாதி மார்க்கத்தையும், பகவன் மாயையைத்தாண்டுமுபாயத்தையும், பகவத் ஸாமீப்யத்தைப்பெறும் சூழ்ச்சியினையும் தெளிவாக எடுத்துரைக்கின்றன. ஆதலால் இந்த உபநிஷத் பாகத்தைப் பின்பற்றுவதே விவேகிகளான முமுக்ஷுக்களுக்குரிய கடமையாகும். நீராடப் போகின்றவர்கள் நுரை அழுக்கு முதலியவற்றை நீக்கி முழுகி அதனைக் கிரஹிப்பதுபோலவே அவைகளின் தமோகுண ரஜோகுண பாகங்களை விட்டு ஸத்துவகுண பாகத்தையே அறிஞர்கள் கையாள்வார்கள்.

இங்ஙனம் ஸத்வகுணமுடையவர்கள் கையாளத்தக்கஉபநிஷத் பாகங்களோ பலவுள்ளன. அவற்றையெல்லாம் பயின்று பொருண் முடிவுகாண்பது சில்வாழ்நாள் பல்பிணி சிற்றறிவினர்க்கு மிகவும் அரியதாகும். இதனையறிந்த ஸர்வேசுவரன் பூபாரம் தீர்ப்பதற்காக "ஒருத்திமகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்திமகனாயொளித்து வளர" என்கிறபடியே தேவகியின்வயிற்றிற் பிறந்து, ஆய்ப்பாடியில் யசோதையிடத்து வளர்ந்து பூதனை, சகடம், யமளார்ச்சுனர், அரிஷ்டன், பிரலம்பன், தேனுகன், காளியன், கேசி, குவலயாபீடம், சாணூரன், முஷ்டிகன், கௌசலன், கம்சன் முதலானோர்களைக் கொன்று ஜகத்தை வாழ்வித்து ஸௌந்தர்ய சௌசீல்யகுண முதலியவற்றைபபிரகாசப்படுத்தி, அக்ரூரர் மாலாகாரர் முதலானவர்களைப்பரமபாகவதர்களாக்கி, பாண்டு புத்திரர்களை யுத்தத்திற்புகச் செய்கிறதென்கிற வியாஜத்தினால் மோக்ஷத்திற்குக் காரணமாக வேதாந்தத்திற்சொல்லப்பட்டதும், கர்மயோக ஞானயோகங்களை

அங்கமாகவுடையதுமாகிய பக்தியோகத்தைச் சாரதியாய் நின்று அர்ச்சுனனை நோக்கி வெளியிட்டான்.

உபநிஷத்துக்களாகிய தஷ்டப் பசுக்களைக் கண்ணபிரான் அர்ச்சுனனாகிய கன்றை முகாந்திரமாகக்கொண்டு பால்கறந்தனன்; என்றுஞ் சொல்லப்பட்டுளது. இந்த உபதேசக்ரந்தமாகிய பகவத்கீதையை உலகில் வெளியிட்ட வியாசர், நான்குமுகமில்லாத பிரமதேவனென்றும், இரண்டு கைகளையுடைய ஹரியென்றும், மூன்று கண்ணில்லாத சிவனென்றும் புகழப்படுகிறார்.

"பகவத்கீதா கிஞ்சித் அதீத" என்றும், "ஸக்ருத் கீதாப் யாவலி ஸ்நாநம் ஸம்ஸார மலமோசநம்" என்றும் இந்தக்கீதையின் மேன்மை சொல்லப்பட்டுளது. பாரசா பாராசர்ய போதாயனாதியர்களால் சில சாஸ்திரம் தோன்றியிருக்க, இந்தக் கீதோபநிஷத் மாத்திரம் பகவானால் வெளியிடப்பட்டதினால் இதன் மேன்மை சொல்லாமலே விளங்கும். இத்தகைய கீதையை அப்யஸித்தவன் யமபட்டண முதலியவற்றைப் பார்ப்பதில்லை.

குருக்ஷேத்திரத்தில் பாரதயுத்தம் நேர்ந்தபோது அர்ச்சுனன், 'இப்பொழுது என்னோடு எதிர்த்து நிற்கிற தமையன் தம்பிமார் குரு உறவினர்முதலானவர்களைக்கொன்று வெற்றியடைந்து இராஜ்யஞ்செய்வதிருக்கட்டும்' என்று வில்லை வைத்துவிட்டுச்சும்மாவிருந்தனன். அப்பொழுது 'இதுவே தக்க சமயம்' என்று கண்ணபிரான் அவனை நோக்கிக் கீதோபதேசஞ் செய்யத் தொடங்கினன். பாண்டவர்கட்கு வெற்றிகிடைத்தபிறகு அவர்கள் இராஜ்யபரிபாலனத்தில் உத்ஸாகங்கொண்டு திரிவார்கள்; அப்பொழுது உத்தம சாஸ்திரத்தை உபதேசித்தால் அவர்கள் செவிக்கேறிடாது; என்ற கருத்தால் கண்ணபிரான் யுத்தம் தொடங்குகிற சமயத்தில் அதர்மத்தைத் தர்மமாகக்கருதி மயங்கும்படியான புத்தியை அருச்சுனனுக்குப் பிறப்பித்தான்.

இவ்வாறு குருக்ஷேத்திரத்தில் பாண்டவர்கட்கும், துரியோதனாதியர்க்கும் நேர்ந்த யுத்தத்தை ப்ரத்யக்ஷமாகக் காணுமாறு வியாசர் ஸஞ்சயர்க்கு ஞானக்கண்ணைக்கொடுத்தனர். அதனைப்பெற்ற

ஸஞ்சயர் திருத்தேர்த்தட்டினின்றும் கண்ணபிரான் அர்ச்சுனனை நோக்கிக் கீதோபதேசஞ்செய்த வரலாறு முதலியவற்றைத் திருதராஷ்ட்ரனுக்கறிவித்தனர்.

அர்ச்சுனனுக்கு க்ஷத்திரிய தர்மத்திற்கு விரோதமாக யுத்தத்தில் எதிர்த்த பந்துக்கள் முதலானவர்களை வதைப்பது முறையன்றென்ற புத்தி தோன்றி யுத்தஞ்செய்யாது நின்றனன். அதன்பிறகு இவன் கண்ணபிரானை நோக்கி, 'யான் தோஷங்களால் மூடப்பட்ட ஸ்வபாவமுடையவனும், தர்மத்திற் சந்தேகமுற்ற மனமுடையவனுமிருக்கின்றேன்; உம்மையே உபாயமாகவடைந்த சிஷ்யனாகிய எனக்கு எது சிறந்த புருஷார்த்தமோ அதனைத் தேவரீரே அருளிச்செய்யவேண்டும்" என்று வேண்டினன். அப்பொழுது கண்ணபிரான், தேஹாத்மாபிமான காரியமான பந்துக்கள் பக்கலுள்ள சிநேகத்தையும், வதைசெய்வதில் பீதியையும் மாற்றுவதற்காகத் தத்வஜ்ஞானத்தை யுபதேசிக்கத் தொடங்கினன்.—ஆத்மா வேறு, தேஹம்வேறு. ஆத்மா எப்பொழுதும் அழியாதநித்யனும், விகாரமில்லாதவனும், ஆயுதங்களால் வெட்டப்படாதவனும், ஜலத்தினால் நனைக்கப்படாதவனும், அக்கினியால் எரிக்கப்படாதவனும், வாயுவினால் உலர்த்தப்படாதவனும், தேஹேந்திரிய மன ப்ராண புத்திகளைக்காட்டிலும் வேறுபட்டவனும், ஜ்ஞானாநந்த ஸ்வரூபனும், அணுபரிமாணனு மிருப்பவ னென்பதையும், தேஹமோ பால்யம் யௌவனம் கிழத்தனம் நரை திரை முதலிய விகாரங்கட்கு இடனாயுள்ளதென்பதையும், எல்லா ஆத்மாக்களின் இருதயத்தில் நின்று ப்ரவ்ருத்தி நிவிருத்திகளைச் செய்கிறவன் பரமாத்மாவென்பதையும், அவன் சாதுக்கள் நிமித்தமாக அவதரிக்குமியல்பையும், அவன் எல்லா ஆத்மாக்கட்கும் ஸுஹ்ருத்தாய் விளங்குபவனென்பதையும், அஹங்காரத்தின் தோஷத்தையும், இந்திரியங்களை யடக்குவது அரிதென்பதையும், இந்திரியங்களினும் மனமேசிறந்தது; அதனை யடக்குவது அரிதிலுமரிது; அறிஞர்கள் இவற்றையடக்க வேண்டுமென்பதையும், ஆர்த்தன் ஜிஜ்ஞாஸு அர்த்தார்த்தி ஞானி என்ற அதிகாரிகளின் வகுப்பையும், பகவத் பக்தியுடையவர்களே தேவர்கள்; அஃதில்லாதவர்கள் அசுரர்கள் என்ற பிரிவையும், விசுவ

ரூபதரிசனத்தையும், கர்ம ஞானங்களை அங்கமாகவுடைய பக்தி யோகத்தையும், ப்ரபத்திமார்க்கத்தையும், ஸர்வேசுவரனையடைந்தே தாண்டுதற்கரிய மாயையைக் கடக்க வேண்டுமென்பதையும் தெளிவாக அருளிச்செய்தான். இவ்விஷயங்களின் விரிவுரைகளே பதினெட்டு அத்தியாயங்களில் அடங்கியுள்ளன.

இந்தக் கீதையில் ஸாரமாயுள்ள அம்சம் யாதெனின்:—நிவ்ருத்தி மார்க்கத்தைத் தெளிவாக விளக்குகின்ற சரம சுலோகமே. இதற்குமேல் முடிவானபொருள் பிறிதொன்றில்லையென்ற அம்சத்தைத் தெரிவிக்கின்றதினால் இதற்குச் சரமசுலோகமென்று பெயர் வழங்கலாயிற்று. எல்லாத்தர்மங்களையும் விட்டு ஸர்வேசுவரனையே உபாயமாகப்பற்றினால், அங்ஙனம்பற்றினவனிடத்திலுள்ள எல்லாப் பாபங்களையும் அவன்விடுவிப்பதாக இதில் விதிக்கப்படுகிறது. தர்ம ஸம்ஸ்தாபநம் பண்ண பிறந்தவனாகிய கண்ணபிரான் தானே எல்லாத்தர்மங்களையும் விட்டுத் தன்னைப்பற்றும்படி சொல்வதினால் ஸாக்ஷாத் தர்மம் அவனேயென்பதும், அவ்வாறு பற்றுவதே அவனுக்கபிமதமென்பதும் பெறப்பட்டன. அஹங்கார மமகாரங்களிலே மண்டித்திரிகிறசேதனர்களை நோக்கி வேதபுருஷன் "கொண்டிப்பசுவுக்குத் தடிகட்டி விடுவரைப்போல" உபாயாந்தரங்களாகிய கர்மஜ்ஞானாதிகளை விதித்தான். இதனால் சுத்தசாத்விக நிஷ்டர்கள் ஈசுவரனாகிய உபாயத்தையே பற்றிக் கடத்தேற வேண்டுமென்பதே இந்தச்சரம சுலோகத்திற்போந்தபொருளாம். "நகர்மணா" என்று ஆரம்பிக்கும் உபநிஷத் வாக்கியத்திலும் இந்தச் சரமசுலோகத்திற் குறிப்பிடுகின்ற தியாகமே உபதேசிக்கப்படுகிறது.

உலகத்தில் இதர விஷயங்களில் மண்டித் திரிகின்றவர்களே பெரும்பாலர்களாதலால், அவர்கள் நித்யாநித்யங்களையறிந்து கரணங்களை அடக்குமுறை இந்தக்கீதையில் கற்பிக்கப்படுகிறது. இக்கீதையை அன்புடன் முறையாகப் பயின்றவர்கள் ஞானங்கனிந்த நலமாகிய பக்தி தலையெடுக்கப்பெற்று உய்வார்கள்.

முன்பு மணக்கால்நம்பி ஆளவந்தாரைக் கீதோபதேசத்தாலே சிறந்த ஞானநிஷ்டராய்த்திகழும்படி செய்தனரென்பது பிரசித்தம். ஆதலால் கீதார்த்தத்தையறிந்துகொள்வதற்கு யாவர்க்கும் கடமையுண்டு. இனி, ஒவ்வொரு அத்தியாயத்திலுள்ளவற்றை நன்காராய்ந்து அவற்றின் பொருள் எடுத்துரைக்கப்பெறும்.

காளி. வங்கிபுரம். ரங்கஸ்வாமி ஐயங்கார்,

குற்றாலம்.

தொடரும்.

ஸ்ரீ:

ஆதிபரதன்.

இவன், பிரியவிரத வம்சத்திலுதித்த ஓர் அரசனான ருஷபனுடைய குமாரன். இவன் அரசுரிமையை மேற்கொண்டு தன்னுயிரைப்போல் மன்னுயிரையும் போற்றிவந்தான். பின்னர் இவ்வரசுரிமையிலாசையற்றுத் தன் குமாரனான சுமதியென்பவனிடத்தில் இராஜ்யத்தை ஒப்பித்துவிட்டுத் தபசு செய்வதற்காகச் சாளக்கிராமம் சென்றனன். அங்குப் புலன்களையடக்கி ஒருநிலையுடைய மனத்தினனாய்த் தபசு செய்துகொண்டிருந்தனன்.

இங்ஙனம் நிகழ்கின்றகாலத்தில் ஒருநாள் மஹாநதிதீரத்திற் சென்று மாத்யாஹ்நிக ஸ்நானஞ்செய்து நித்யகர்மத்தை முடித்துக் கொண்டிருந்தவளவில், அங்கு ஒரு கர்ப்பிணியான மான் நீர்த் துறையிலிறங்கி நீரருந்திக்கொண்டிருந்தது. அப்பொழுது ஒரு சிங்கம் கர்ச்சித்தது. அவ்வொலியைக்கேட்ட மான் நடுக்கமுற்று, அக்கரை செல்ல முயன்று தாண்டிச்செல்லும்போது, வேகத்தினால் வயிற்றிலிருந்த குட்டி நழுவி நீரில் விழுந்தது. பின்னர் அந்த மானும் அடிபெயர்த்து வைப்பதற்கு ஆற்றாது அந்த நீரிலே விழுந்திறந்தது.

இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்த பரதன் அன்பு கூர்ந்து, தாயிழந்த மான்குட்டியை எடுத்துக்கொண்டு வந்து தன் ஆசிரமத்தில் வைத்து வளர்த்து வந்தனன். அதுவும் இப்பரதன் செய்த போஷணையால் நன்கு வளர்ந்துவந்தது. நெடுநாள் புத்திரப் பேறில்லாத ஒருவன் புத்திரனைப் பெறுவனேல் அவன்பால் எவ்வளவு அன்பு செலுத்துவனோ, அவ்வளவன்பைக்காட்டிலும் பத்து மடங்கு அதிகமாக இந்தப் பரதன் மான்குட்டியினிடத்து அன்பு பாராட்டி வந்தான். அந்தக் குட்டியைச் சிறிதுநேரம் காணாவிடில் ஆற்றொணாத்துயரக்கடலில் ஆழ்வான்; அக்குட்டியைக் கண்ட பின்னரே அத்துன்பக்கடலினின் றெழுவான். பேயொடு பழகினும் பிரிதலரிதன்றோ!

இவ்வாறு பாதன் மான்குட்டியினிடத்தில் பேரன்பு பாராட்டித் தன் வாழ்நாளைக் கழித்துவரும்போது தனக்கு மரணகாலம் கிட்டியது. அப்பொழுது அந்த மான்குட்டி இவனெதிரில் நின்றது. அதனைப் பார்த்து, 'அந்தோ! இனி, இக்குட்டியைப் போற்றுவார் யார்?' என்று தன் முழு அன்பையும் அதன்பால் வைத்து உயிர் துறந்தான். இந்த அந்திம ஸ்மிருதியின் பலனால் நற்கதியை யடையாமல் மறுபிறப்பில் மானாக வந்து பிறந்தான். முன் ஜன்மத்தில் யோகாப்யாசத்தைச்செய்த பலத்தின் மகிமையால் முன்னிருந்த நிலைமையெல்லாம் தன் ஞானத்திற்கு விளங்கியது. 'இனி இந்த மான் ஜன்மத்தை விரைவில் கழித்துக்கொள்ளவேண்டும்' என்பதில் கவலைகொண்டு ஆகாரமின்றியிருந்து உயிர் துறந்து வேதாத்யயனஞ்செய்த ஓர் உத்தமப் பிராமணனுக்குப் புதல்வராய் வந்து பிறந்தனர். அப்பொழுதும் பூர்வ ஜன்மத்தின் விருத்தாந்தத்தை நினைத்து ஞானத்திற் சிறந்தவராய் விளங்கினர்.

மேலும் இம்மை மறுமைப் பலன்களில் விருப்பற்று, யாகம் முதலியவற்றைச் செய்வதிலும் வைராக்கியமுற்று, வேதாதிகளை ஓதாமலும், தன்னுடைய ஞானுதிக்யத்தைப் பிரகாசிப்பியாமலும் ஒரு ஜடனைப்போல இருந்தனர். அதனால் இவர், ஜடபாதரெனப் பெயர் வழங்கப்பெற்றனர். இவருடைய மஹிமையை யறியாமல் சகோதரர்களும், மற்றுமுள்ளவர்களும் உபேக்ஷித்தனர். அதனால் இவரும் யதேச்சையாகச் சஞ்சரித்துக்கொண்டிருந்தனர்.

இவ்வாறிருக்கையில் ஸௌவீர ராஜனுடைய சேவகன் காளிக்கு ஒரு நரபலியிடுவதற்குப் பலவிடங்களிலும் தேடித் திரிந்து, இவரைக் கண்டுபிடித்துக்கொண்டுபோய், காளிகோவிலில் நிறுத்திக் கத்தியால் வெட்டத் தொடங்கினான். காளி இவருடைய ஞானத்தின் சீர்மையை யறிந்தவளாதலால் பிம்பத்தினின்றும் வெளிப்பட்டு அந்தச் சேவகனைக் கிழித்துச் சின்னபின்னஞ்செய்து உதிரத்தைப் பருகினாள். இந்த ஜடபாதரைக் கொண்டாடி 'சென்று வருவீர்' என்று விடையளித்தனள். இவரும் முன்புபோலத் திரிந்துகொண்டிருந்தார்.

பின்பு ஸௌவீரராஜன் ஒருசமயம் கபிலமஹரிஷியினிடஞ் சென்று தத்வார்த்தங்களைக் கேட்கவிரும்பிப் பல்லக்கேறிச் சென்றனன். வழியில் இந்த ஜடபரதரைக்கண்டு 'இவன் பருத்திருக்கிறான்; நன்றாய்ச் சுமப்பான்' என்று மதித்து, 'இந்தப் பல்லக்கைச் சுமந்து வருவாய்' என்று ஆக்ஞாபித்தான். அவரும் பல்லக்கைச் சுமந்து மற்றவர்களோடு சமமாய் விரைந்து செல்லாமல் மெதுவாக நடந்தனர். அப்பொழுது பல்லக்கு ஆட்டங்கொண்டது. இதனைக்கண்ட அரசன் இவரை விரைவாக நடக்கச் சொல்ல, இதை வியாஜமாக வைத்து ஜடபாதர் சில ஞானம்சங்களைச் சொல்லத்தொடங்கினர். அரசன் கேட்டு 'இவர் ஓர் சிறந்த ஞானவிசேஷமுடையவரா யிருக்கவேண்டும்' என்று நிச்சயித்துப் பல்லக்கை விட்டிறங்கி, அவரடியில் விழுந்து வணங்கி 'அடியேன் செய்த பிழையை மன்னித்துக்கொண்டு தத்வார்த்தங்களை உபதேசிக்க வேண்டும்' என்று வேண்டினன். அவரும் அவ்வாறே தத்வார்த்தங்களை உபதேசித்தனர்.

ஸ்ரீ:

நன்கொடை.

நமது திவாகரம் நீண்டகாலம் நிலைபெற்றோங்க, ஆத்ம குணம் நிறைந்த தர்மசீலர் சிலர் உபகரித்து வருகின்றனர். அம்முறையில் அஞ்சார்வார்தலை ப்ரஹ்மஸ்ரீ T. S. கிருஷ்ணமூர்த்தி ஐயரவர்களும், திருவிந்தளூர் ராவ் சாஹிப் ஸ்ரீமாந். இரத்தினம் பிள்ளை யவர்களும், வளவனூர் புதூர், ஸ்ரீமாந். R. கிருஷ்ணரெட்டியாரவர்களும் ஜீவித சந்தாதார்களாகச்சேர்ந்து ஒவ்வொருவரும் இருபத்தைந்து ரூபா கொடுத்துள்ளார்கள். தர்மத்தில் விசுவாசம் குறைந்து வருகிற இக்காலத்தில் இவர்கள் இவ்விஷயத்தில் உபகரித்ததினால் இவர்களது பெருந்தகைமை நன்கு விளங்கும். இப் பெரியார்கள் சுற்புகழெய்திப் பெறுதற்கரிய பேற்றையும்பெற்றின்புறுமாறு இறைவன் றன் இணையடியை இறைஞ்சுவோமாக.

ப. அ.

ஸ்ரீ:

சென்னை, ஸ்ரீவைஷ்ணவ மஹா சங்கம்.

நிகழும் 1932௵ டிசம்பர்மீ 29௨ முதல் நான்குநாள் வரை ஷை சங்கத்தின் 6-ம் வருஷோத்ஸவம், சென்னை கோவிந்தப்ப நாயக்கன் தெரு உப்பட்டூர் ஆழ்வார் செட்டியார் இராமாநுஜ கூடத்தில் நடைபெறும். அக்காலத்து ஸ்ரீரங்கம ஸ்ரீமாந் பராங்குச ராமாநுஜ ஏகாங்கிஸ்வாமி அக்ராசனாதிபத்தியத்தில் பலஅறிஞர்கள் உபந்யஸிப்பார்கள். ஆஸ்திகர்களெவரும் ஆங்கு விஜயஞ்செய்து கேட்டாநந்திக்க ஷை சங்கத்தார்கள் வேண்டுகிறார்கள். ஷை சங்க நிகழ்ச்சியின் விவரங்களை நன்கு கேட்டுத் தெளியவேண்டுமென்று விருப்பமுடையவர்கள், கீழ்க் குறிப்பிடப்பெற்ற சங்கக் காரியதரிசி அவர்கட்கு எழுதித் தெரிந்துகொள்க.

ஸ்ரீமாந், K. வெங்கடசாமி நாயுடுகாரு,
அட்வோகேட்,
காரியதரிசி,
சென்னை ஸ்ரீவைஷ்ணவ மஹாசங்கம்,
25, ஆதியப்பநாயக்கன் தெரு, சென்னை.

ஸ்ரீ:

மதிப்புரை.

திருக்குறட் குமரேச வெண்பா:—இந் நூலாசிரியர் திருவாளர் ஜெகவீரபாண்டிய னென்பார். இவர் 'உலகிற்கோர் நல்விருந்தளிக்க வேண்டும்' என்று இந்நூலியற்றுதலாகிய பணியை மேற்கொண்டனர் போலும். திருக்குறட் குமரேசவெண்பாவென்பது திருக்குறளை விடயமாகக்கொண்ட குமரேசரது சம்பந்தமான வெண்பாவென விரியும். ஈண்டுக்குமரேசர்க்குச்சம்பந்தம் முன்னிலைப்படுத்துதன்மாத்திரையே. "சோமேசர் முதுமொழி வெண்பா முதலிய நூலாசிரியர் திருக்குறளிலுள்ள ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒவ்வொரு திருக்குறளையெடுத்து அதற்குவரலாற்றுமுறையை இயைத்துத் தெரித்துப்போந்தனர். இந்நூலாசிரியர், "ஆயிரத்து முந்நூற்றுமுப்பதருங்குறளும், பாயிரத்திேனாடு பகர்ந்ததற்பின்—போ

யொருத்தர், வாய்க்கேட்க நூலுளவோமன்னுந்தமிழ்ப்புலவர், ஆய்க் கேட்க வீற்றிருக்கலாம்'' என்று நத்தத்தனார் உரைத்தபடி தேவர் இயற்றிய குறளனைத்தும் முக்கியப்பொருளைக் கொண்டுள்ளன என்று மனத்துட்கொண்டு, 'எல்லாக்குறளிற்கும் நன்கியையுமாறு வரலாற்று முறையைத்தெரிப்பல்' என்று தொடங்கி நூற்றிரண்டா மதிகாரம் வரை முடித்து நூற்றுமூன்றும் அதிகாரம் தொடங்கி யிருக்கின்றார். குறள் வெண்பாவில் ஆறுசீரில் திருக்குறளிற்கேற்ற கதைப்பகுதியைப்புகுத்துக் 'குமரேசா!' என்ற முன்னிலைக்கேற்ப மோனையமையப்பாடுவது அருமைபாகும். இஃதல்லாமலும் இதில் ஒவ்வொரு வெண்பாவிற்கும் பாடியம் போன்றவிரிவுரையும், இலக் கணக்குறிப்பும், கதைப் பகுதியும் நன்கு திகழ்கின்றன. இவை, பண்டித பாமரர்கட்கும் இன்சுவையளிக்கும் பெற்றியன. இதனால் இந்நூலாசிரியரது கவியியற்றும் வன்மையும், நுண்ணறிவும் நன்கு போதரும்.

"காமத்துப்பாலி லுள்ள திருக்குறளனைத்திற்கும் வரலாற்று முறை எங்ஙனமுரைக்க ஒல்லும்'' என்று உலகங்கருதுகிற கருத் தகல அப்பாலிலுள்ள எல்லாக்குறளிற்குந் தவறாது வரலாற்றினை எடுத்திசைத்தஞான்று இவ்வாசிரியரது புகழ் மேலும் கொழுந்து விட்டோடிப்படரும். இவையொருபுறமிருக்க, இப்பெரும்பணியை மேற்கொண்ட இவ்வாசிரியரைஉலகமாதரித்ததனால் இப்பணியைப் பெரும்பாலும் இடையீடின்றிக் கடைபோக நடத்தினர். இன்னும் இப்பணி முற்றுப்பெறுவதற்கு எல்லோருமாதரித்து இவ்வாசிரிய ருக்கு ஊக்கத்தையளிப்பார்களென்று நம்புகிறேன். இந்நூலினை விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்க.

வருடச்சந்தா ரூ ...	4—0—0
1 முதல் 9 தொகுதிகள் தனித்தனி ரூ ...	4—0—0
அறத்துப்பால் முழுவதும் 780 பக்கம் ரூ ...	8-12—0
ஷை மூலம் ரூ ...	1—0—0
பொருட்பால் முதற்பாகம் 800 பக்கம்ரூ ...	8-12—0
ஷை இரண்டாம்பாகம் ,, ரூ ...	8-12—0

விலாசம்:—மானேஜர், திருவள்ளுவர் நிலையம்,
ஆத்துக்குடி.

ப. அ.